| | | | | |
|---|---|---|---|---|
| **AKHBAR** | **: MALAYSIA NANBAN** | | **MUKA SURAT** | **: 4** |
| **TARIKH** | **: 04 FEBRUARI 2024** | | **HARI** | **: AHAD** |
| **SENTIMEN :** | **POSITIF** | | | |

# கல்விக் கடனைத் திருப்பிச் செலுத்த எளிதான வழிமுறைகள் பிடி.பிடி.என். அமலாக்கம்

கோலாலம்பூர், பிப். 4-

கல்விக் கடனை எளிதாக திருப்பிச் செலுத்தும் வழிமுறைகள் சம்பந்தமாக பிடிபிடிஎன் எப்போதும் முன் முயற்சிகளை அமல்படுத்தி வருவதாக அதன் தலைமைச் செயல்முறை அதிகாரி அகமது டாசுக்கி அப்துல் மஜிட் தெரிவித்தார்.

கல்விக் கடனுதவி பெற்றவர்கள் பிரத்தியேகமாக நன்மையடையும் வண்ணம் பல்வேறு பிரச்சார இயக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு வரும்.

கடனை சீராக திருப்பி செலுத்துதல் என்ற பிரச்சார இயக்கத்தை பிடிபிடிஎன் 2024 ஆண்டு முன்வைத்தது. சம்பளத்தில் பிடித்தம் மற்றும் நேரடி வங்கி வழியாக கடனை சீராகவும் முறையாகவும் பாதுகாப்பாக செலுத்துவதற்கு இத்தகைய பிரச்சார இயக்கம் ஊக்குவிப்பதாக இருக்கிறது.

பிடிபிடிஎன் கல்விக் கடன் உதவி பெற்றவர்களுக்கு உரிய இயக்கம் இது. இப்பிரச்சார இயக்கம் 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தேதியிலிருந்து மே மாதம் 31 ஆம் தேதிவரை அமலில் இருக்கும்.

62 வெற்றியாளர்களுக்கு வழங்கப்படும் கவர்ச்சிகரமான பரிசு தொகை 70,000 வெள்ளி. இது இரண்டு வகையை சேர்ந்தது. ஒன்று சம்பளத்தை பிடித்தம் செய்தல். மற்றொன்று வங்கி வழியாக நேரடியாக செலுத்துதல். ஒவ்வொரு பிரிவின் முதலாவது வெற்றியாளருக்கு 5,000 வெள்ளி. ஒவ்வொரு பிரிவின் 30 வெற்றியாளர்களுக்கு ஆறுதல் பரிசாக ஆளுக்கு ஆயிரம் வெள்ளி வழங்கப்படும்.

கல்விக் கடன் பெற்றவர்கள் தங்களின் கடனை திருப்பி செலுத்துவதற்கான கடமை கடப்பாட்டினை சீராகவும் பொறுப்பாகவும் மேற்கொள்வதற்கு இது ஊக்குவிப்பாகவும் தக்க தளமாகவும் விளங்கும்.

அடுத்த தலைமுறையினர் நன்மையடையும் வகையில் பிடிபிடிஎன் கல்வி கடனுதவி திட்டத்தை நாம் தொடர்ந்து மேற்கொள்ள இயலும்.

இத்தகைய இயக்கத்தின் வழி ரொக்கப்பணம் பெறுபவர்கள் இரண்டு வகையில் அனுகூலம் அடைகின்றனர். நிதி ரீதியில் கூடுதல் பணம் பெறுகிறார்கள்.

மற்றொரு வகையில் கல்விக் கடனை அடைக்கவும் அல்லது கல்வி சேமிப்பில் வரவு வைப்பதற்கும் இது உதவுகிறது.

2024 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தின் மூலம் அரசு ஒரு கழிவு சலுகை திட்டத்தை அறிவித்துள்ளது. சம்பளத்தை பிடித்தம் செய்தல் அல்லது வங்கி வழியாக நேரடியாக தொகையினை செலுத்து வது போன்றவைக்கு 15 விழுக்காடு கழிவு வழங்கப்படும்.

இது 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதி வரை அமலில் இருக்கும். இத்தகைய சலுகையினை பயன்படுத்திக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட தரப்பினர் அறிவுறுத்தப்படுகின்றனர்.

மேலும் விவரங்களுக்கு www.ptptn.gov.my என்ற அகப்பக்கத்தை அலசுமாறும் அல்லது my PTPTN செயலியில் பதிவிறக்கம் செய்யுமாறு கல்விக் கடனுதவி பெற்றவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**TRANSLATION:**

The National Higher Education Fund Corporation (PTPTN) is offering a 'Bayar Consistent, Hati Senang' campaign to help borrowers make loan repayments. The campaign, which starts from January 1 to May 31, aims to encourage borrowers to fulfill their responsibilities and ensure the continued sustainability of PTPTN loans for the next generation. A lucrative prize of RM70,000 is offered to 62 winners in two categories: salary deduction and direct debit. The main winner receives RM5,000 in each category, while consolation winners receive RM1,000. The campaign is open to all PTPTN borrowers and will run from January 1 to May 31. The government has also agreed to provide a 15% discount incentive for PTPTN loan repayments by salary deduction or direct debit from October 14 to March 31, 2024. The campaign aims to increase awareness of PTPTN borrowers to make consistent repayments through the deduction method. For further inquiries, borrowers can visit the official PTPTN portal at www.ptptn.gov.my or download the myPTPTN application.